# கொரியாக்களிடையே போர்க் காய்ச்சல்

வட கொரியா – தென் கொரியா இடையே மீண்டும் ஒரு போர் ஏற்படும் அளவிற்கு பதட்டநிலை அதிகரித்துள்ளது. காரணம் தென் கொரியாவின் போர் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப் பட்டதுதான். அமெரிக்கா – ரஷ்யா நாடுகள் இடையே ஒரு காலத்தில் பனிப்போர் நிலவியது. இந்த பனிப்போர் காரணமாக கொரியா நாடு வடகொரியா, தென்கொரியா என இரண்டாக பிளவு பட்டது. வடகொரியா ரஷ்யாவுடன் நட்புக்கொண்டு கொம்யூனிஸ்டு நாடாகவும், தென் கொரியா அமெரிக்க ஆதரவு நாடாகவும் இருந்து வருகின்றன. இந்த இரு நாடுகளுக்கும் இடையே சுமூகமான உறவு கிடையாது. அடிக்கடி இருநாடுகளுக்கும் இடையே மோதல்கள் ஏற்படுவது வழக்கம்.

இந்நிலையில்தான், கடந்த மார்ச் மாதம் 26ம் திகதி தென்கொரியாவின் 1,200 தொன் எடை கொண்ட கடற்படை கப்பல் ஒன்று வடகொரியா கடல்பகுதி எல்லை அருகே நின்றபோது, திடீர் என்று கடலில் மூழ்கியது. இதில் இருந்த 46 கடற்படையினரும் இதன்போது பலியானார்கள். இந்த சம்பவத்துக்கு என்ன காரணம் என்பது குறித்து தென் கொரியா விசாரணைக்குழு அமைத்து விசாரித்தது. இந்த குழுவில் அமெரிக்கா உள்பட பல வெளிநாட்டு நிபுணர்களும் கலந்துகொண்டனர். மூழ்கிய கப்பல் வெளியே கொண்டுவரப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பின்னர் தென்கொரியா கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்கு வடகொரிய நீர் மூழ்கிக்கப்பல் தாக்குதல் தான் காரணம் என்பது கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து தென் கொரியா வடகொரியா மீது குற்றஞ்சாட்டியது. கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாக அறிவித்தது. இந்த சம்பவத்தில் உலக நாடுகள் பலவும் தென்கொரியாவுக்கு ஆதரவு தெரிவித்தன. ஆனாலும், இந்த குற்றச்சாட்டை வடகொரியா மறுத்தது. தமது கடற்படையினர் அதனைத் தாக்கவில்லை என்றும் கூறியது.

இதனையடுத்து, தமது கப்பல் மூழ்கடிக்கப்பட்டதற்காக வடகொரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்றும், ஆனால், ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்த பிரச்சினை குறித்து புகார் செய்வோம் என்றும் தென்கொரியா தெரிவித்ததோடு, வடகொரியா மீது பொருளாதார தடை கொண்டு வர முயற்சிகளையும் எடுப்போம் என்றும் தென் கொரியா அறிவித்தது.

இந்த அறிவிப்பை அடுத்து, தங்கள் நாட்டின் மீது பொருளாதார தடையைக் கொண்டு வந்தால், தென்கொரியா மீது போர் தொடுப்போம் என்று வட கொரியா கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளது. இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த திங்களன்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். இது வடகொரியாவிற்கு மேலும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒபாமா வெளியிட்டுள்ள அறிக்கையில், போர்க்கப்பலை மூழ்கடித்ததற்காக தென்கொரியாவிடம் வடகொரியா உடனடியாக மன்னிப்பு கேட்கவேண்டும். அதோடு போர்க் கப்பலை மூழ்கடித்ததில் தொடர்பு உடையவர்களை தண்டிக்க வேண்டும். மேலும் தென்கொரியாவை மிரட்டும் போக்கை கைவிடவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அதோடு அவர் தனது நாட்டு இராணுவ தளபதிகளுக்கு, தென்கொரிய தளபதிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், வடகொரியாவின் இராணுவ நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஆயத்தமாக இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க இராணுவத்துடன் சேர்ந்து நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு போர் பயிற்சிகளை மேற்கொள்வோம் என்று தென்கொரியா பாதுகாப்புத்துறை அமைச்சர் கிம் டே யங் தெரிவித்து இருக்கிறார். எல்லையில் தென் கொரியா பலத்த பாதுகாப்புகளை செய்திருக்கிறது. அதோடு வடகொரியா எதிர்ப்பு பிரசாரங்களையும் ஒலிபெருக்கி மூலம் தென்கொரியா தொடங்கியுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த வடகொரியா பதட்ட நிலைமையை தொடர்ந்து நீடித்தால் தென் கொரியா இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று இப்போது எச்சரித்துள்ளது. இந்தப் பதட்டமான நிலைமையானது எதாவது ஒரு நாடு தாக்குதலைத் தொடங்கினால் அது பெரும் போராக மாறும் நிலை ஏற்படும். இந்தப்போரானது இரு நாடுகளுக்கும் இடையிலான போராக மட்டும் இருக்காது என்றும், தென் கொரிய – வட கொரிய சார்பு நாடுகள் தங்கள் தங்கள் ஆதரவு நாடுகளுக்கு உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்க முனைந்தால் போர் இன்னொரு வடிவம் எடுக்கும் என்றும் அச்சம் வெளியிடப்படுகின்றது.

தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரித்தானியா உட்பட சில வல்லரசு நாடுகள் உள்ளன. வடகொரியாவிற்கான ஆதரவு நிலைப்பாட்டுடன் ரஷ்யா மற்றும் சீனா உள்ளன. ரஷ்யா இதில் நடுநிலை வகிப்பதற்கு முனைந்தாலும் சீனா வடகோரியாவிற்கு எப்போதும் ஆதரவாகவே இருக்கும். எனவே, ஐ.நாவில் வடகொரியாவிற்கு எதிராக எடுக்கப்படும் இறுக்கமான தீர்மானங்கள் எதனையும் நிறைவேற்றுவதற்கு வீட்டோ அதிகாரம் கொண்ட சீனா அனுமதிக்காது.

இதேவேளை, இந்த விவகாரத்தில் வட கொரியாவுக்கு எதிராக தென் கொரியாவுடன் சேர்ந்து ஐ.நாவில் பொருளாதார தடை விதிக்குமாறு பரிந்துரைக்க மாட்டோம் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது. ஆனால் தங்களது நாட்டு




**இந்தப் பதட்டமான நிலைமையானது எதாவது ஒரு நாடு தாக்குதலைத் தொடங்கினால் அது பெரும் போராக மாறும் நிலை ஏற்படும். இந்தப்போரானது இரு நாடுகளுக்கும் இடையிலான போராக மட்டும் இருக்காது என்றும், தென் கொரிய – வட கொரிய சார்பு நாடுகள் தங்கள் தங்கள் ஆதரவு நாடுகளுக்கு உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்க முனைந்தால் போர் இன்னொரு வடிவம் எடுக்கும் என்றும் அச்சம் வெளியிடப்படுகின்றது.**



கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரத்தை தென் கொரியா ஐ.நா. சபையில் எழுப்பும் பட்சத்தில் அதற்கு ஜப்பான் முழு ஆதரவு அளிக்கும். ஆனால் இந்த ஆதரவு தனிப்பட்ட முறையில் இருக்கும் என்றும் அந்நாட்டு தலைமை அமைச்சரவை செயலர் ஹ்ரோஃபுமி ஹ்ரானோ தெரிவித்தார். இராணுவ கப்பல் மூழ்கடிக்கப்பட்டது என்பது தென் கொரியாவின் சொந்த விவகாரம். இதனால் இந்த விடயத்தில் அந்நாட்டுடன் இணைந்து ஐ.நா.சபையில் எவ்வித பரிந்துரையையும் ஜப்பான் அளிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, தென் கொரிய கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரத்தில் ஐ.நா. உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளது என்று அதன் பொதுச் செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பெய்ஜிங்கில் கடந்த 24ம் திகதி திங்கள்கிழமை அமெரிக்க, சீன நாடுகளுக்கு இடையேயான இராஜதந்திர, பொருளாதார கூட்டுப் பேச்சுவார்த்தையின் தொடக்க நிகழ்ச்சியில் சீன அதிபர் ஹு ஜிண்டாவோ, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹ்லாரி கிளிண்டன் ஆகியோர் சந்தித்துப் பேசியிருந்தனர். இதில் கொரியா விவகாரம் முக்கிய இடத்தைப் பிடித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

வட கொரியாவை கட்டுப்படுத்துவதற்கான வழிகள் இப்போது ஆராயப்படுகின்றன. அவை எவ்வாறு அமையப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதேவேளை, தற்போது இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி வடகொரியா, தென் கொரியாவுடன் உள்ள அனைத்து தொடர்புகளையும் துண்டித்துக்கொண்டுள்ளது. வடகொரியாவின் எல்லைக்குள் உள்ள கயெசோங் என்ற நகரில் இருநாடுகளும் கூட்டாக தொழிற்பூங்காவை அமைத்துள்ளன. இந்த பூங்காவில் உள்ள தொழிற்சாலைகளில் இரு கொரிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் பணியாற்றி வருகிறார்கள். இங்கு வேலை செய்யும் தென் கொரியர்களை நாடு கடத்துவோம் என்று வடகொரியா அறிவித்துள்ளது. தென்கொரிய கப்பல்களும், விமானங்களும் வடகொரிய எல்லை வழியாக செல்வதற்கு தடைவிதிக்கப்படும் என்று வடகொரியா அறிவித்துள்ளது.